# உரையின் வரைபு
# காரியப்பர் பாடசாலை திறப்பு விழா
# 18 ஏப்ரல் 2019

ஆளுநர் ஹிஸ்புல்லா, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மாலை வணக்கம், அஸ்ஸலாமு அலைக்கும். காரியப்பர் பாடசாலையின் இந்த அழகிய மேலதிக இணைப்பை திறந்து வைப்பதற்கும், முக்கியமாக இங்கு கல்வி கற்கும் மாணவர்களுடன் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைத்தமைக்கும் மகிழ்ச்சியடைகிறேன். ஒற்றுமை மற்றும் சகவாழ்வு தொடர்பில் எமக்காக பாடல் பாடிய மாணவர்களுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

இலங்கையின் எதிர்காலம் அதன் இளைஞர்களே என்பதுடன், பாதுகாப்பான மற்றும் வளர்ப்பு சூழலொன்றில் கிடைக்கூடிய தரமான கல்வியிலேயே அந்த எதிர்காலம் தங்கியுள்ளது. சுனாமியால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்காக 2011ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தப் கலவன் பாடசாலையை இலங்கையின் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பரிந்துரையின் கீழ் தரமுயர்த்த அமெரிக்க அரசாங்கம் தெரிவுசெய்தது. 12 வகுப்பறைகளை நிர்மாணிக்கவும் அதேபோல், விஷேட தேவையுடையோரும் பயன்படுத்தக் கூடிய வகையில் உங்களது பாடசாலையை மாற்றியமைப்பதற்கும் அமெரிக்க அரசாங்கம், இலங்கை கல்வி அமைச்சுடன் இணைந்து 107 மில்லியன் ரூபாய்களை (ஏறத்தாழ 613,500 டொலர்கள்) முதலீடு செய்துள்ளது. இந்த மேலதிக வசதிகள் மேலும் 480 மாணவர்கள் தமது கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும்.

இந்தப் புதிய கட்டடத்தின் சுவர்களானது புதிய கருத்தாக்கங்களை கண்டறியவும் பழைய கருத்தமைவுகளை கேள்விக்குட்படுத்தவும் பாதுகாப்பான சூழலொன்றை மாணவர்களுக்கு வழங்குகின்றன. இந்த ஜன்னல்கள் மாணவர்களுக்கு வித்தியாசமான சிந்தனைகள் உருவாக வழிவகுக்கும் அதேநேரம், கதவுகளானது புதிய வாய்ப்புக்களை வழங்குவதாக அமைகின்றன. இதனையே பாடசாலையொன்று பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதாவது இலங்கையின் இளைய சமுதாயம் கற்பதற்கான வாய்ப்பு, ஆராய்தல் மற்றும் சவாலுக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு இந்த வாய்ப்புக்களை வழங்குவது இதில் மிக முக்கியமானதாகும். பெண்களின் கல்வி பல சமூகங்களில் வரலாற்று ரீதியாக கவனிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. எனது சொந்த சமூகத்திலும் கூட இந்த நிலைமை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் இலங்கையின் எதிர்கால பெண் தலைவர்களுக்கு எம்மால் இந்த உதவியை வழங்க முடிந்தமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எவ்வாறிருப்பினும், பாடசாலையொன்றை விடவும் மேலும் பல இந்த கட்டமைப்புக்கு தேவையாக இருக்கிறது. நாம் இங்கு மக்கள் செறிந்து வாழும் பகுதியில் நின்று கொண்டிருக்கிறோம். துரதிர்ஷ்டவசமாக இது இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசமாகும். எனவே தான் கட்டிடமொன்றை அமைக்க நாம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளோம். இந்த கட்டிடத்தை தேவையான நேரங்களில் உங்களது சமூகத்துக்கான அவசர தங்குமிடமாகப் பயன்படுத்தவும் முடியும். சமையலறையானது நாளொன்றுக்கு 500 சாப்பாடுகளைத் தயாரிக்கக் கூடியதாகவும், 35,000 லீற்றர் மழைநீரை சேகரித்து பாதுகாப்பான குடிநீராகப் பயன்படுத்துவதற்கான முறைமையும் உள்ளடக்கப்பட்டிருப்பதால் இங்கு தங்கும் எவருக்கும் உதவிகளை வழங்க முடியும்.

பதினெட்டு மாதங்களில் நாம் இதன் கட்டுமானப் பணிகளைப் பூர்த்திசெய்திருப்பதுடன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் உடனான எமது கூட்டிணைந்த பணியானது இந்த திட்டத்தை உரிய நேரத்தில் பூர்த்திசெய்வதற்கு இன்றிமையாததாக அமைந்திருந்தது. அவர்களின் ஒத்துழைப்புக்கும், பாடசாலை அதிபர் திரு. ஏ.எல்.ஏ. நா∴பித் மற்றும், Magbool Engineering Consultants மற்றும் Salasi Lanka Engineering ஆகியவற்றில் உள்ள எமது பங்குதாரர்கள் ஆகியோருக்கும் நான் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். அதுமாத்திரமன்றி அவசியமான ஒத்துழைப்பை வழங்கிய U.S Army Corps

of Engineers ஐயும் இங்கு நினைவுகூற விரும்புகிறேன். குறிப்பாக கத்ரின் ஹெர்மோன், டெரி ஜோன்ஸன், ஜோர்ஜ் ரிச்சட்ஸ் மற்றும் இந்து-பசுபிக் கட்டளையகம்/அமெரிக்க தூதரகத்தின் சிவில் இராணுவ ஒத்துழைப்பு பிரிவு ஆகியவற்றுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் சமரசம் நிறைந்த இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது என்ற அமெரிக்கத் தூதரகத்தினதும் அரசாங்கத்தினதும் ஒத்துழைப்பின் ஒரு அங்கமாக இந்த பங்காண்மை அமைந்துள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் நல்லாட்சியை முன்நகர்த்திச் செல்வதற்கும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவும் சகலருக்கும் சமமான உரிமைகள் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தவும் சகலருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்கவும் இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது என்ற வகையில் நாம் அதற்கு தோளோடு தோள்கொடுத்து வருகின்றோம். இந்த எண்ணப்பாட்டின் கீழான இந்த சிறிய திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.